DEPOSITION OF WITNESS
IN THE COURT OF SUB COURT, DENKANIKOTTAI
PROSECUTION WITNESS

SC. No. 131/2023 Crime No. Station PS

| | | | |
|---|---|---|---|
| Name | Lw3 /Pw2 /Manjunath | Village | D.Kothapalli |
| Father Name | Basavaraj | Age | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of Oath Act the day of | | | |

**<u>28.01.2025.</u>**

**எதிரிகள் ஆஜர் .**

**முதல் விசாரணை**

சத்தியமாக சொல்கிறேன்.

நான் தற்போது டி.கொத்தப்பள்ளியில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன்.

காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள 2 வது கையெழுத்து என்னுடையது தான்.

சுமார் 4 ஆண்டுகளுக்கு முன்பு சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் முருகன் என்பவர் வீட்டை போலீசார் பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் வரைபடம் தயார் செய்து என்னிடம் கையொப்பம் பெற்றார்கள்.

இந்த சாட்சி மூலமாக பார்வை மகசர் **அ.த.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

நான் கையொப்பம் இட்ட தாளில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது. போலீசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க கையொப்பம் இட்டேன்.

**குறுக்கு விசாரணை முழுமையாக முடிக்கப்பட்டது.**

ஓம்./-திரு.ஆர்.ஹரிஹரன்.,எம்.எல்.,
சார்பு நீதிபதி,
தேன்கனிக்கோட்டை.

DEPOSITION OF WITNESS
IN THE COURT OF SUB COURT, DENKANIKOTTAI
PROSECUTION WITNESS

SC. No. 131/2023 Crime No. Station Kelamangalam PS

| Name | Lw7/Pw3 / Rajesh VAO | Village | |
|---|---|---|---|
| Father Name | Singaram | Age | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of Oath Act the day of | | | |

**28.01.2025.**

**எதிரிகள் ஆஜர் .**

**முதல் விசாரணை**

சத்தியமாக சொல்கிறேன்.

நான் தற்போது இருதுக்கேட்டை கிரம VAO ஆக பணியாற்றி வருகிறேன்.

கடந்த 12.06.2021 ம் தேதி பைரமங்கல கிராம VAO ஆக பணியில் இருந்தபோது ராயக்கோட்டை வட்ட காவல் ஆய்வளார் திரு. சுப்ரமணியம் செல்போனில் அழைத்ததின் பெயரில் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகசரில் சாட்சியாக இருக்க வேண்டி அக்கொண்டப்பள்ளி பேருந்துநிலையத்திற்கு காலை சுமார் 8.15 மணி அளவில் சென்றிருந்தேன்.

அங்கு காவல் ஆய்வாளர் மற்றும் சக காவலர்கள் இருந்தார்கள்.

அவர்களுடன் பெங்களூர் பொம்மசந்திரம் பகுதியை சேர்ந்த ஹரி என்பவரின் மனைவி திவ்யா என்ற பெண், பெங்களூர் மாரத்திஅள்ளி பகுதியை சேர்ந்த ராமு என்பவரின் மகன் ராஜா, மற்றும் கிருஷ்ணப்பா என்பவரின் மகன் மஞ்சுநாத் இருந்தார்கள்.

இன்று சாட்சி A2 ராஜா மற்றும் 3 ம் எதிரி மஞ்சுநாத்தை அடையாளம் காட்டினார்.

இன்று முதல் எதிரி ஆஜர் இல்லை அவருக்கு பதிலாக கு.வி.மு.சா.317 ல் மனு அளிக்கப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

காலை 8.30 மணி அளவில் அக்கொண்டப்பப்ளி பேருந்துநிலையத்தில் வைத்து திவ்யா தானக முன் வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் அளித்தார்.

அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் அவர்கள் பூர்விகமாக வேலுர் மாவட்டம் குடியரத்தத்தை சேர்ந்தவர் என்றும் அவர்கள் கடந்த 22 ஆண்டுகளுக்கு முன்பு பெங்களூரில் உள்ள மாரசந்திரா பகுதியில் வாடகை வீட்டில் குடியேரியதாகவும்,

கடந்த 13 ஆண்டுகளுக்கு முன்பு குடியாத்தத்தை சேர்ந்த ஹரி என்பவரை நான் திருமணம் செய்ததாகவும் கூறினார்.

மேலும் கடந்த 6 மாதங்களுக்கு முன்பாக ஓசூரில் கெலமங்கலம் செந்தில் நகரை சேர்ந்த முருகன் என்பவருடன் தனக்கு பழக்கம் ஏற்பட்டது என்றும் அவர் அழைத்த போதெல்லாம் அவர் வீட்டிற்கு சென்று தங்கி சமைத்து சாப்பிட்டு தான் செல்வேன் என்றும் அதற்கு முருகன் தனக்கு வந்தபோதெல்லாம் ரூ.5000 முதல் ரூ.10000 வரை அளிப்பார் என்றும்,

அவ்வாறு முருகன் வீட்டிற்கு அப்வபோது வந்து போவதில் முருகனிடம் பணியாற்றும் அந்ததோனி மற்றும் வெங்கடேஷ் தனக்கு நன்றாக பழக்கம் ஆனார்கள் என்றும்.

மேலும் முருகன் வட்டி வியாபராம் செய்வதால் அவரிடம் நிறைய பணம் மற்றும் நகை இருப்பதை தெரிந்து கொண்டு இவர்களுடன் சேர்ந்து அதை திருடி செல்ல ஆசை வந்தது என்றும்.

இது தொடர்ச்சியாக கடந்த மே 21 ம் தேதி அன்று முருகன் வீட்டிற்கு வந்து அவரது பணத்தை கொள்ளை அடிக்கும் நோக்கத்தில் அவர் அருந்தும் மதுவில் தான் மாத்திரை கலந்து கொடுத்ததகாவும்.
அவர் துங்கிய பிறகு அவர் வீட்டில் இருந்து ரூ.2½ லட்சம் பணத்தை எடுத்து பெங்களுருக்கு எடுத்து சென்றதாக கூறினார்.
பறகு 4 நாட்கள் கழித்து முருகனுக்கு போன் செய்து விளையாட்டு தனமகாக நான் ரூ.2½ லட்சம் பணத்தை எடுத்து சென்றதாக கூறினார்.
மேலும் அந்த பணத்தை தானே செந்தில் நகருக்கு வந்து முருகனிடம் அளித்தபோது அதை தானே வைத்துக்கொள்ளும்படி முருகன் சொல்லிவிட்டார் என்று கூறினார்.
அப்போது முருகன் தான் Sriram finance ல் ரூ.19 லட்சம் வைத்துள்ளதாகவம் அது மெச்சூரிட்டி ஆன பிறகு தன்னுடைய SBI account க்கு 10 ம் தேதி வந்துவிடும் என்று அதை வீட்டில் எடுத்து வந்து வைப்பதாக தன்னிடம் கூறினார் என்றும்.
இதை தெரிந்த உடன் மேலே சொன்ன நபர்கள் மற்றும் அர்களது நண்பர்கள் உடன் சேர்ந்து அந்த பணத்தை கொள்ளை அடிக்க தான் திட்டம் போட்டதாகவும்,
இந்த திட்டத்திற்கு அத்திப்பள்ளி சேர்ந்த பிரேம்குமார் என்ற புல்லட், ரகு மற்றும் மற்றெரு நபரிடம் இந்த திட்டத்தை சொல்லியதாகவும்.
நான் பிரேம் குமார் என்ற புல்லட்டிடம் அவர்கள் 10 ம் தேதி கெலமங்கலம் செந்தில் நகருக்கு வந்தால் தான் முருகன் வீட்டில் தான் இருப்பேன் என்றும் அவரது வீட்டை அவரிடம் பணியாற்றும் அந்தோணி மற்றும் வெங்கடேஷ் அடையாளம் காட்டுவார்கள் என்றும் நீங்கள் தக்க சமயத்தில் ஆட்களுடன் வந்தால் அதை கொள்ளை அடித்து சென்றுவிடலாம் என்று கூறினார்.
இது தொடர்ச்சியாக தானும் முருகனும் அவரது வீட்டில் சுமார் மதியம் 2.30 மணி அளவில் சாப்பிட்டுக்கொணடு மது அருந்திகொண்டிருந்தபோது பிரரேம்குமார் என்ற புல்லட், மது மற்றும் இன்னொருவர் தங்கள் முஞ்சில் கருப்பு துணியை அடையாளம் தெரியாதவாறு கட்டிக்கொண்டு திடீர் என்று வீட்டிற்குள் நுழைந்து எனையும் முருகனையும் கத்தியை காட்டி மிரட்டி முருகனை சரமாரியாக அடித்தது குப்பர போட்டு அவரது கை மற்றும் காலை கட்டிவிட்டு அவரது கழுத்தில் இருந்த செயின் 1, கையில் இருந்த பிரேஸ்லெட்–1, கையில் இருந்த 4 மோதிரம், பீரோவில் இருந்த ரூ.5000 பணத்தை எடுத்து சென்றதாக ஒப்புதல் வாக்குமூலம் அளித்தார்.
மேலும் இவர்கள் கொள்ளை அடித்து சென்றபிறகு முருகன் கட்டை அவித்துவிட்டு அவர் வீட்டில் இருந்து கிளம்பி அத்திப்பள்ளியில் உள்ள பிரேம் குமார் வீட்டிற்கு சென்று அவரிடம் இருந்து அவரிடம் இருந்து ஒரு ½ பவுண் மோதிரத்தை பெற்றுக்கொண்டு அவரிடம் இருந்த ரூ.5000 த்தை அந்தோனிக்கும் வெங்கடேசுக்கும் அளித்தாகவும் மற்றொரு ரூ.5000 த்தை ராஜாவுக்கும் மஞ்சுநாத்துக்கும் அளிததாகவும் கூறினார்,
பின்பு பிரேம் குமாரிடம் மீதமுள்ள பறித்த நகைகளை விற்று காசாக மாற்றி வரும்படியும் அதை சமமாக பிரித்துக்கொல்லளாம் என்று சொன்னதாகவும் மேலும் இன்று ராஜாவிடம் நீ முருகன் வீட்டிற்கு வந்தால் அவரிடம் பணம் வாங்கி தருவதாக கூறி அவரை அழைத்து வரும்போது அக்கொண்டப்பள்ளி பேருந்துநிலையம் அருகில் போலீசார் தங்களை கைது சொய்ததாக வாக்குமூலம் அளித்தார்.
மேலும் புல்லட் (எ) பிரரேம் குமாரிடம் இருந்து தான் வாங்கிய ½ பவுண் மோதிரம் உள்ளதை கூறினார் போலீசர் என் முன்னிலையில் அந்த அரை பவுண் மேதிரம் மற்றும் ஸ்கூட்டியை கைப்பற்றினார்கள்.
அந்த கைப்பற்றுதல் மகசரில் உள்ள முதல் கையெழுத்து என்னுடையது தான் அந்த

கையெழுத்து மட்டும் **அ.த.சா.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது.
மற்றும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதல் கையெழுத்து **அ.த.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது.
இன்று நீதிமன்றத்தில் காட்டும் மோதிரம் தான் திவ்யாவிடம் இருந்து கைப்பற்றிய ½ பவுண் மோதிரம் என்று அடையாளம் காட்டினார் அந்த மோதிரம் **MOA1** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**அரசு தரப்பு வேண்டுகோளுக்கு இணங்க முதல் விசாரணை தொடர்ச்சி வழங்கப்படுகிறது.**

ஒம்./−திரு.ஆர்.ஹரிஹரன்.,எம்.எல்.,
சார்பு நீதிபதி,
தேன்கனிக்கோட்டை.